# வடமாகாணக்கல்வித்திணைக்களம்

# வடமாகாணம்

**தரம் -9** **பயிற்சிவினாக்கள்**

**கர்நாடகசங்கீதம்**

# பயிற்சிவினாக்கள்

# பகுதி-I

1.வேலை செய்யும் போது களைப்பைப் போக்குவதற்காக பாமர மக்களால் பாடப்படும் பாடல் வகை?
2. மோகன இராகத்தின் தாய் இராகம் யாது ?
3. சதுஸ்ரஜாதி மட்டிய தாளத்தின் பொத்த அட்சரம் யாது?
4. அன்பேதான் எனும் கீதம் அமைந்துள்ள இராகம்
5. ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ ஆரோகண அவரோகணத்தைக் கொண்ட இராகம் ?
6.இசைக்கருவி வகைகளில் தம்புரா எதனுள் அடங்கும்?
7. ஆண்பனையைப் பெண்பனையாக்கப் பாடிய தேவாரம் யாது?
8. 15 வது மேளகர்த்தா இராகம் எது?
9. இப்பியாச வரிரைகளில் அலங்காரம் கற்ற பின் பாடப்படும் உருப்படிவகை எது?
10. பண் இந்தளம் எனப்படும் இராகம் யாது?
11ஆரபி இராகத்திலமைந்த உருப்படியில் ஒன்று பின்வருவனவற்றில் எது?
12. திருவாசகம் பாடப்படும் இராகம் யாது?
13.பெண்களால் கைகொட்டி ஆடப்படும்ஆடல் வகை?
14. சந்தப்பாவலர் பெருமான் என அழைக்கப்படுபவர் யார்?
15.கோல்களால் தாளம் தட்டி பாடப்படும் பாடல் வகை யாது?
16. “காலனிடத்தனுகாதே…..” என்னும் திருப்புகழ் அமைந்துள்ள தாளம் யாது?
17. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் “பைரவதாட்” என அழைக்கப்படும் இராகம் யாது?
18. பிலஹரி இராகத்தின் தாய் இராகம் யாது?
19. ஜண்டைவரிசை பாடப்படும் இராகம் யாது?
20. மிஸ்ர ஜாதி ஜம்பை தாளத்தின் அங்கம் எவை?

## பகுதி-II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. நீர் பார்த்து இரசித்த இசை நிகழ்ச்சி ஒன்றின் தனித்துவமான அம்சங்களை வெளிப்படுத்துக.
அ. பாடப்பட்ட பாடல் வகைகள் எவை?
ஆ. அவற்றின் ஒழுங்குமுறை யாது?
இ. அவற்றிலே பயன்படுத்தப்பட்ட பக்க வாத்தியங்கள் எவை?
ஈ. நீர் கேட்டு இரசித்ததன் மூலம் பெற்றுக்கொண்ட பயன்களைத் தருக?

02 அ. நாட்டியக் கச்சேரிகளில் இரண்டாவதாக இடம்பெறும் உருப்படி எது?
ஆ. அவ்வுருப்படியின் அங்கங்களினைத் தருக?
இ. அவ்வுருப்படியினை இயற்றியவர்கள் இருவரின் பெயர்களைத் தருக?
ஈ. மேற்குறிப்பிட்ட உருப்படிக்கு இரு உதாரணங்கள் தருக?

03. அ. நவகோடி நாராயணன் என அழைக்கப்படும் வாக்கேயகாரரின் பெயரைத் தருக?
ஆ. அவரின் முத்திரையினைத் தருக?

இ. அவருடைய வாழ்க்கைக்காலம், பிறந்த இடம், பெற்றோர் பெயர் என்பவற்றைத் தருக?
ஈ. அவரது இசைப்பணியினை சுருக்கமாக தருக.

04. அ. ஸரிகரி / ஸரி / ஸரிகம // என்னும் அலங்காரம் அமைந்துள்ள தாளம் எது?
ஆ. இதன் இராகம், இயற்றியவர் என்பவற்றைத் குறிப்பிடுக?
இ. இதன் அங்க அடையாளத்தையும் மொத்த அட்சரத்தையும் தருக?
ஈ. இவ் அலங்காரத்தினை ஒழுங்கு முறையில் பூர்த்தி செய்க?